# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1796/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆதிலட்சுமி | க–பெ | ராஜு |
| ஊர்: | : | தேவக்கோட்டை | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | செவிலியர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026**

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தேவக்கோட்டையில் வசித்து செவிலியராக பணி செய்து வருகிறேன். கடந்த 07.07.2022 அன்று காலை 11.30 மணிக்கு நான் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தேன். அப்போது என்னுடன் செவிலியர் சித்ரா தேவி, துப்புரவு பணியாளர் லட்சுமி பிரியா ஆகியோர் இருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரியானவர் அங்கு வந்தார். பொதுவாக அவர் தினமும் வந்து மருத்துவமனையில் ஊசி போட்டு கொண்டு செல்வார். அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு அவர் வந்தார். நான் அவரை பார்த்த உடன் பெட்டில் போய் உட்காருங்கள் நான் ஊசி செலுத்துவதற்காக வருகிறேன் என்று நான் அவரிடம் சொன்னேன். ஊசி கரைய சற்று தாமதம் ஆகும். நான் வேகமாக சென்று அதனை கரைவதற்கு ஏற்பாடு செய்தேன். பின்னர் ஆஜர் எதிரியிடம் சென்று ஊசி செலுத்துவதற்காக பக்கத்தில் போய் நின்ற போது அவரிடம் ஊசி செலுத்த வேண்டும் என்று சொன்னேன். அவர்போனில் ரொம்ப நேரமாக பேசிக்கொண்டிருந்தார். அவர் கையை நீட்டினார். நான் ஊசி போட முயற்சித்தேன். அந்த நேரத்தில் அவருடைய எச்சில் என்மீது தெறித்தது. ஆகையால் மெதுவாக போன் பேசுங்கள் அல்லது போன் இணைப்பை துண்டித்துவிடுங்கள் என்று அவரிடம் சொன்னேன். சொன்ன உடன் அவர் என்னை மரியாதை குறைவாக திட்ட ஆரம்பித்தார். உன்னுடைய ஆத்தா மருத்துவமனையா ஒழுங்கா ஊசி போட முடியாதா என்னை பிச்சைக்காரன் என்று நினைத்தாயா என்றும் அருகில் இருந்தவர்களை பார்த்து அவர்களை போன்று நான் பிச்சைக்காரன் கிடையாது என்றும் தான் வரி செலுத்தி வருவதாகவும் சொன்னார். அவர் பேசிய சத்தம் கேட்டு துப்புரவு பணியாளர் லட்சுமி ப்ரியா செவிலியர் சித்ரா தேவி ஆகியோர் ஓடி வந்து என்ன இவ்வளவு சத்தமாக இருக்கிறது என்று கேட்டார்கள். அப்போது அவர் தாமதமாக வந்தார். அவருக்கு ஊசி செலுத்த சென்றேன். அப்போது உச்சக்கட்ட ஆத்திரத்தில் நிறைய வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்த போது என்னை அவர் கீழே தள்ளினார். நான் என்ன தப்பாக பேசினேன். ஊசி செலுத்துவதற்காக தான் வந்தேன் என்று சொன்னபோது நான் வரும் போது தான் நீ ஊசி செலுத்த வேண்டும் என்று சொன்னார்.

மீண்டும் மீண்டும் எனது கணவர் மற்றும் பெற்றோர்களை அசிங்கமாக பேசினார். அருகில் இருந்தவர்கள் யாரோ வீடியோ எடுத்து பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார். பின்னர் எனது உயர் அதிகாரி முதன்மை மருத்துவர் டாக்டர் தேவக்குமார் என்பவர் இது தொடர்பாக புகார் அளித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கில் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் மேற்படி விபரங்களை சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலமும் தற்போது நீதிமன்றத்தில் அளித்த சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல நான் மேல் சொன்ன விபரங்களை தான் போலீசாரிடம் சொன்னேன். எங்களுடைய மருத்துவமனையில் எத்தனை வார்டுகள் உள்ளது என்றால் 10 இருக்கும். சம்பவம் நடந்தபோது நான் என்ன பணி செய்தேன் என்றால் செவிலியராக பணி செய்தேன். குற்றம் சாட்டப்பட்ட நபர் இருந்த இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீ இருக்கும். எதிரி என்னை உனது ஆத்தா அப்பா மருத்துவமனையா என்று கேட்டார் என்றால் சரிதான். ஆத்தா என்பதை கெட்ட வார்த்தையாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. என்னை கையில் தாக்கவில்லை என்றால் சரிதான். யாருக்கும் காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எங்களுடைய மருத்துவமனையில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் அப்போது இல்லை. சம்பவம் குறித்து எனது பணி பதிவேடு மற்றும் மருத்துவமனை பதிவேட்டில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. சம்பவத்தினால் வேறு நோயாளிகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டதா என்றால் இல்லை. போலீசாரிடம் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பு புகார்தாரரிடம் கலந்து ஆலோசித்தோம் என்றால் சரிதான். போலீசார் நான் கொடுத்த வாக்குமூலத்தை என்னிடம் வாசித்து காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் நான் சொன்ன விபரங்கள் தான் உள்ளது என்றால் சரிதான். எதிரியை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான் நோயாளியாக தெரியும். சம்பவம் நடந்தபோது நேரில் யாரும் பார்த்தார்களா என்றால் முதலில் இருந்து பார்க்கவில்லை சத்தம் கேட்டு வந்தார்கள். எதிரி அரசு ஊழியர்களை தள்ளிவிட்டு தாக்கவில்லை என்றால் சரிதான். வேறும் வாய்தகராறு தான் ஏற்பட்டது என்றால் சரிதான். தேவக்குமார், ஆதிலட்சுமி, சித்ராதேவி, ப்ரியா, சௌமியா, பிரபா, சதீஸ் ஆகியோர்கள் என்னுடன் வேலை பார்ப்பவர்கள் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து தான் புகார் அளித்தோம் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் சுற்றி நின்றார்கள். புகாரில் பொதுமக்கள் யாரேனும் சாட்சியாக வந்துள்ளார்களா என்றால் இல்லை. அரசு ஊழியர் தனது பணியை முற்றிலும் நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கும் எனக்கும் செவிலியர் நோயாளி என்ற முறையில் தான் வாக்குவாதம் நடைபெற்றது என்றால் சரிதான். என்னை குறிவைத்து தனிப்பட்டு தொந்தரவு எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் பாதுகாப்பு கேட்டு மனு கொடுத்திருந்தேனா என்றால் மருத்துவமனைக்கு பாதுகாப்பு கேட்டேன். காவல் நிலையத்திற்கும் மருத்துவமனைக்கு எவ்வளவு தூரம் என்றால் 1கிமீ. சம்பவம் நடந்தது 07.07.2022 புகார்கொடுத்தது 08.07.2022 என்றால் சரிதான். எதிரி உள்நோயாளியாக ஊசி போட்டார் என்றால் சரிதான். உள்நோயாளியாக இருப்பவர் வெளியில் சென்று வரலாமா என்றால் டாக்டர்

அனுமதியோடு வெளியில் சென்று வந்தார். வந்த உடன் BP, Suger பரிசோதனை செய்வோமா என்றால் செய்வோம். எவ்வளவு இருந்தது என்றால் நியாபகம் இல்லை. எந்த நோய்க்காக சிகிச்சை பெற்றார் என்றால் டயாபடிஸ் நோய் மற்றும் காலில் அடிபாதத்தில் புண் ஏற்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது அதற்காக சிகிச்சை பெற்றார். பெப்டாஸ் என்ற மருந்தை நான் ஊசியாக போட்டேன். அது ஆன்டிபாயாடிக் ஊசி என்றால் சரிதான் வலி நிவாரணி ஊசி என்றால் சரியல்ல. மேற்படி ஊசி வெளியில் என்ன விலை என்றால் ரூ.500 க்கு மேல் இருக்கும். ஊசி போடும் போது அரசு மருத்துவமனையில் இலவசமாக போடுகிறோம் வெளியில் காசு கொடுத்து வாங்கி போட்டால் தான் அருமை தெரியும் என்றும் வக்கத்தவன் என்று சொல்லி திட்டினேன் என்றால் சரியல்ல. அடிபாதத்தில் சீல் வைக்கப்பட்டிருக்கும்போது நோயாளிக்கு கோவம் வர வாய்ப்புள்ளது என்றால் சரிதான். எங்களிடம் வரும் நோயாளி ஊசி போடும்போது கத்தும் நோயாளிகள் உள்ளார்கள் என்றால் வலிதாங்காமல் வலிக்குது என்று சொல்வார்கள். வலி தாங்க முடியாமல் கத்திக்கொண்டிருக்கும்போது நான் திட்டினேன் என்றால் சரியல்ல. செல்போன் பேசிக்கொண்டே நான் ஊசி போட்டேன் என்றால் சரியல்ல. செவிலியராக அனைத்து நோயாளிகளையும் கவனிப்பது எனது கடமை என்றால் சரிதான். எதிரி வலி தாங்க முடியாமல் தான் வாய்தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை என்றாலும் என்னை தாக்கவில்லை என்றாலும் எந்த வன்கொடுமையும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் பணியை செய்ய விடாமல் தடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனறால் சரியல்ல. நான் எனது உயர்அதிகாரியிடம் ஆலோசனை செய்து காலதாமதமாக 08.07.2022 அன்று எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.29 16:04:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.